# இந்துசாதனம்

(1889)

| பத்திரக் கிரயம். | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஒ 1-க்கு | ரூ. | 5-00 |
| இலங்கை, இந்தியா: | ,, ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: | ,, ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்,"

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ.10-00 |
| ,, | அரைக்கலம் | ரூ. 4.50 |
| ,, | கால்கலம் | ரூ. 3 00 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்;-பிரமோதூதவூ ஆடிமீ ௩0௨, (1930 ஆகஸ்டு 14) வியாழக்கிழமை. { இலக்கம்—கரு


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த

வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேழு
மதம்பூத்தவிநாயகன்றன் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

ஸ்ரீ கதிர்காமம்
கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த்
திருப்பணித் தர்ம இயல்பு.

கதிரைமலை கமலையிலுள்ள முத்து மாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடந்தேறிவரு கிற ஷை தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடந்தோங்கி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

கனதனவான்களாகிய சகல புண்ணிய சிலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு உதவும் பணம் அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் சிவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனுகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
(Y. 66 31-12-30.) கதிரமலை.

---


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ச்சி கொண்டு வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை காரணமாக விளம்பரத்தில் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாலு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாலை, சர்ப்பகுப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளிவிதை, ஈரகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் சீழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, பெருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் கோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨.0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகதாராவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
Y 75. 31-12-30.) இலோன்.


---


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம்ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியனோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக் கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)


இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

(Y. 72. 21-8-30.)


---


## The "New Lanka" Roadster Chromium Plated Bicycle.

கவனிக்கத்தகுந்த குறிப்புகள்.



1. கைபிடிக்கம்பி குரோமியம் பூசப்பட்டது
2. ஆசனத்தின் வில்லுக்களும் குரோமியம் பூசப்பட்டது.
3. சட்டம் உறுதியாய் இணைத்த உருக்கு.
4. சேறுதாங்கி மிகவும் கனமானது.
5. பிறேக்குகள் திருத்தமான முறையாக உள்ளன.
6. வளையங்களும் குரோமியம் பூசப்பட்டவை.
7. கம்பிகள் கெருப்புக்குஉருக்கக்கூடாத பனிக்குப்பூச்சுப் பூசப்பட்டவை.
8. சங்கிலி "ஹான்ஸ் றினோல்ட்" கம்பனியினுடையது.
9. சில்லுக்குடங்கள் மிக்ககனதியான 1¼ இஞ்சு பிரமாணமான குண்டுகளைக் கொண்டவை
10. சில்லுத்தாங்கி முட்டைவளைவுள்ளதம், குரோமியம் பூசப்பட்டதுமாய்த்திருத்தமான முறையாகவும் உள்ளது.

### கைவிலைக்கு ரூபா 75.

அல்லது

தவணையிலே முதல் மாசம் 10 ரூபாயும், பின்னர்
10 மாசங்களுக்கு மாசந்தோறும் 7 ரூபா 16 சதமும்.

SUB-AGENTS:—

M A. Sinna Lebbe Bros., Batticaloa.
Jayanoris Silva & Sugathadasa, Trincomalee.
T. N. Lingam Vannarponnai, Jaffna
National Drapery Stores, Anuradhapura
R. M C. de Silva Main Street, Ambalangoda
L N de Silva Matara.

SOLE AGENTS:
**Colombo Stores Ltd.**
P. O. BOX 197. —— COLOMBO.

(Y. 74. 19 6 30 to 18 12 30)


---


## சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
காம்புவலி
இல்வாய்வு
இடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

### லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்

உடன் சுகந்தரும்.

43 வருடகாலமாய் அனுபவத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின்விலை ஒரு பெரிதல்ல.

மிருகக்கொழுப்புச் சேராதது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

(1—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51 31-12-30)

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூதவூ ஆடிமீ ௩0௨ வியாழக்கிழமை.

## இலங்கைப் புகைரதப் பகுதி.

1

சென்ற சில வருடங்களாக இலங்கைப் புகைரதப்பகுதி வருவாய் குறையத் தொடங்கிக்கொண்டது. இதனால் அரசினர் புதியனவாய்த் திறக்க வெண்ணியிருந்த புகைரதப் பாதைகள் சிலவற்றை இப்போதைக்குத் திறக்க முயற்சிசெய்யாதொழிந்தனர். துரிதமாக நடந்துவந்த புகைரதப்பாதை வேலைகள் சிலவற்றை இப்போதைக்குத் தவணையிட்டிருக்கின்றனர். ஒருநாளைக்குப் பலமுறையோடிய புகைரதங்களை இப்பொழுது சிலமுறையே ஓடும்படியான ஒழுங்கு செய்திருக்கின்றனர். புகைரத மார்க்கமாகப் பயணஞ்செய்யும்படி பிரயாணிகளைத் தூண்டத்தக்க வழிவகைகளை யெல்லாம் புகைரதப்பகுதியார் இப்பொழுது அநுசரித்து வருகின்றனர். இப்படியெல்லாஞ் செய்தாலும் புகைரத வருவாய் வாரத்திற்கு வாரங் குறைந்து கொண்டு வருகின்றதேயன்றிக் கூடியபாடில்லை. இதனையிட்டு அரசினர் பெரிதும் யோசிக்கலாயினர். புகைரதப்பகுதி வருவாய் குறைந்தமைக்குக் காரணமென்னவென்பதைச் சிறிது ஆராய்வோம்:

இலங்கையிலிருந்து புகைரதவாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த றப்பர், தேயிலை, கொப்பறு என்னும் இந்த மூன்று பிரதான பொருள்களுக்கும் இப்பொழுது மானமில்லாமற்போக இவைகளின் வியாபாரங் குறைந்துவிட்டது. ஏறக்குறைய இலங்கையின் எப்பாகத்திலுமுள்ள தெனச் சொல்லத்தக்க தேங்காயின் விலை மிகவுங் குறைந்துவிட்டது. வேற்றுத்தேசங்களிற்குக் கொப்பறு இப்பொழுது ஏற்றுமதி செய்யப்படுவதில்லை யெனச் சொல்லலாகும். மேலைத்தேசத்திற்கும் அமெரிக்காவுக்குமே இங்குள்ள கொப்பறு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. ஆனால் அமரிக்கர் இறக்குமதித்தீர்வையில்லாமல் பிலிப்பைன்தீவுகளிலிருந்து கொப்பறுவை இப்பொழுது தருவிக்கத் தலைப்பட்டுக்கொண்டார்கள். முன் தென்னையில்லாத எத்தனையோ நாடுகளில் இப்பொழுது தென்னை விருத்தியாய்விட்டது. மேலும் தேங்காய்நெய்க்குப் பதிலாக, நிலக்கடலைநெய், எண்ணெய் பனை (Oil Palm)நெய் முதலிய உபயோகிக்கப்படலாயின. இதனால் இலங்கைக் கொப்பறு தேவோரற்றுக் கிடக்கின்றது. இங்குளள றப்பர் தேயிலை யென்னுமிவைகட்கும் இக்கதியே நேரலாயிற்று. புகைரதப் பகுதி வருவாய் குறைதற்கு இது பிரதான ஏதுக்களு ளொன்றாகும்.

இரண்டாவதாகவுள்ள ஏது யாதெனஆராயுமிடத்து மோட்டரதம், பஸ், லொறி யென்னுமிவைகள் இக்காலத்தில் அதிகப்படக்கிடக்கின்றது. மோட்டரதங்களும் பஸ் லொறி யென்னுமிவைகளும் நாளுக்கு நாள் துரிதமாக அதிகப்பட்டு வருகின்றதென்பதை எவரும் கண்கூடாக் காணலாம். இப்பொழுது இந்த இலங்கையில் சொந்த உபயோகத்திற்காக 12000 பேர் வரையில் மோட்டாரதம் வைத்திருக்கின்றனர் 3500 பஸ்களும், 2400 லொறிகளும் இலங்கையிற் சஞ்சாரஞ் செய்கின்றன. புகைரதத்திற் பிரயாணஞ்செய்தோர் எவ்வளவு தொகையானோர் இப்பொழுது அதனை விடுத்து இவற்றை உபயோகித்து வருகின்றார்களென்பதையும் புகைரதவாயிலாக ஏற்றுமதி யிறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் எவ்வளவு லொறிகள்வாயிலாகவும் "பஸ் வாயிலாகவுங் கொண்டு போகப்படுகின்றனவென்பதையும் எவரும் யூகித்தறியலாகும். மேலும் இவ்விலங்கையில் 4000 மைல் நீளங்கொண்ட தெருவீதிகள் மோட்டரதம் முதலியவைகள் உபயோகிக்கத்தக்கனவாயுள்ளன. மோட்டரதங்கள்போலவே துவிசக்கரம், றிக்ஷா, மாட்டுவண்டி யென்னுமிவைகளும் இப்பொழுது அதிகப்பட்டுவரலாயின இவைகளெல்லாம் புகைரதப்பகுதி வருவாய்க்குப் பிரதிகூலமானவைகளேயாம்.

இனி, பிரயாணிகளும் பொருள்களைத் தருவிக்கும் அனுப்பும் வியாபாரிமார்களும் புகைரதத்தைக்காட்டிலும் மோட்டாரதம் பஸ் லொறி யென்னுமிவற்றையே விரும்புகிறார்கள். இங்ஙனம் இதனை வெறுப்பதற்கும் அவற்றை விரும்புதற்குமான காரணங்களெவை யென்பதையும் புகைரத வருவாய் இன்னமுங் குறையாமற் செய்தற்கான வழிவகைகள் எவையென்பதையும் அடுத்த பிரசுரத்தில் ஆராய்வோம்.



## பாரதநாட்டிற் சமாதானம் வருமோ.

'வெண்ணெய் திரண்டுவருஞ்சமையத்தில் தாழி உடைந்தவிதமாக" ஸேர் ஸப்ரு, ஜயக்கர் முதலிய தலைவர்கள் இருபக்கத்துஞ் சமாதானம் பேசிக்கொண்டு நிற்குஞ்சமையத்தில், சமாதானம் விரைவில் வருமென உலகம் முழுவதும் எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் இந்தச் சமையத்தில், பம்பாயத் தேசாதிபதி, குயமட்கலங்களையெல்லாம் கோல் கொண்டடித்துடைத்த தடியடிகாரனைப்போல இந்திய தலைவர்களாகிய பண்டித மதனமோகன்மாளவியா சர்தார் வல்லபை படேல் என்னுமிவர்களைச் சிறைப்படுத்திவிட்டமையினால், சமாதானம் விரைவில் வருமென்ற நம்பிக்கை சனங்களிடத்து அறவே நீங்கிவிட்டது. பம்பாய்த் தேசாதிபதி இத்தலைவர்களைச்சிறைப்படுத்தும் விஷயத்தில் இந்திய பிரதிகாவலரோடும் யோசிக்கவில்லையாம். வணங்கா முடியோனுகிய துரியோதனன் தானும் தான் ஒருகருமத்தைச் செய்யத்துணிந்த காலத்தில் சகுனி கன்னன் துச்சாதனன் முதலியவர்களோடு யோசித்தே செய்தானென்று மகாபாரதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பம்பாய்த் தேசாதிபதி தமக்குமேலாகவுள்ள இந்திய பிரதிகாவலரோடு தாஞ்செய்த நவைச் செய்யமுதற் யோசித்திருப்பரேல் ஒருபோதும் இந்தப்பிழை நடந்திருக்க மாட்டாது. இர்வின பிரதிகாவலர் சமாதானம் விரைவில் வரவேண்டுமென்னும் ஆவல்பூண்டவரென்பது அவர் இப்பொழுது தெரிவிக்கும் விஷயங்களால் இனிது அறியக்கிடக்கின்றது. ஆனதால பம்பாய்த்தேசாதிபதி செய்த இந்த அடாத செயல் பிரதிகாவலருக்கும் வெறுப்பாகவிருக்கவேண்டுமெனதேயென்ன இடமுண்டு. பம்பாய்த்தேசாதிபதிபோன்ற யோசனையற்ற சில மேலுத்தியோகத்தர்களின் செயல்களாலும இந்தியாவில் வெளிவரும் சில ஐரோப்பிய பத்திரிகைகளின் துவேஷவியாசங்களினாலுமே இந்திய அரசினருக்கும சனங்களுக்குமிடையில் விசுவாசமின்மை சந்தேகம துவேஷம முதலாக தீமைகள் விளைகின்றன. இவர்களாலும் இவைகளாலுமே இப்பொழுது பாரதநாட்டில் இந்த அநர்த்தங்களெல்லாம நேரலாயினவென்றெண்ணக் கிடக்கின்றது. இங்கிலாந்திலுள்ள அதிகாரிகளும் இந்தியபிரதிகாவலரும அரசியல் மகாசபையாரும் சமாதானத்தையிட்டு முயற்சிகள் செய்ய, பம்பாய் சென்னை வங்காளம் முதலாம் மாகாணங்களிலுள்ள தேசாதிபதிகள் அடக்குமுறையைக் கடுமையாக அநுசரித்து எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவார்போல் சனங்களுக்கு ஆத்திரத்தையும் வெறுப்பையும அதிகப்படுத்தி வருகின்றனர். இவற்றைநோக்குமிடத்துச் சமாதானம் விரைவில் வருமோ என்னும் விஷயத்திற் சந்தேகம் பிறக்கின்றது. வெச்சனவுக்கன்றி வெண்ணெயுருகாதென்பது பிருத்தானியர் விஷயத்திற் பொருத்தமான பழமொழியாகும்.

## உலகம் பலவிதம்.

நம்மவர்கள் நமது மூதாதைகள் கைக்கொண்டுவந்த மேலான பழக்கவழக்கங்களையும் ஆசாரங்களையும் கைவிட்டு மேலைத்தேசவாசிகளின் நாகரிகங்களையும் உடைநடைபாவனைகளையும் கைக்கொள்ளத் தலைப்பட்டுக்கொண்டார்களல்லவா. இப்படிச்செய்யத்தொடங்கிய இவர்கள் நெய்யரி (பன்னாடை)போல் மேலைத்தேசவாசிகளிடத்துக்காணப்படும் நல்லசெயல்கள் ஒழுக்கங்களையொழுக விடுத்து அவர்களிடத்துள்ள தீயசெயல்களையும் பழக்கவழக்கங்களையுமே ஏற்நிறைத்துக்கொண்டார்கள். மேலைத்தேசவாசிகளிடத்து நேர்மை, உள்ளதை உள்ளபடி சொல்லுதல், குறித்த குறித்த நேரத்திற் குறித்த குறித்த கருமங்களைச் செய்தல், இடையறுஒழுக்கம் கெம்பீரம் முதலாம் சுகுணங்களும நற்பழக்கங்களும் காணப்படுகின்றன. ஆனால் அவர்களைப் பின்பற்றி நடக்கும் நம்மனோர் இந்தச்சுகுணங்களையும் நற்பழக்கங்களையும் ஒழுக விட்டுவிட்டு, அவர்களிடத்துள்ள மதுபானம, உடைநடைபாவனைகள், டாம்பீகம் முதலாம் தீச்செயல்களையே எந்நிவைத்துக்கொண்டு இடர்ப்படுகின்றார்கள். இவைகளைப் பின்பற்றியொழுகும் இவர்கள் ஐரோப்பியர்செய்வதுபோல் அவற்றை மட்டாகவும் முறையாகவும் கிரமமாகவுஞ் செய்யப்பின்பற்றி நிருக்கிறார்களோவென்றால், அதுவுமில்லை.

* * *

உதாரணமாக மதுபானத்தையெடுத்துக்கொள்ளுவோம். கள்ளுண்ணல் முற்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்ததாயினும் அது பெரும்பான்மையுக் தாழ்ந்த சாதியார்மாட்டே காணப்பட்டது. கள்ளல்லாமல், சாராயம் அக்கியநாட்டு மதுபானங்களை இங்குள்ளார் அந்நியபரிபாலனம் ஏற்பட்டதின்னரேயன்றி முன்னர் அறியாரெனலாம், முதன்முதல் பறங்கியர் இலங்கைத் துறைமுகங்களில் ஒன்றையடைந்து தம்கப்பலை நங்கூரமிட்டபோது அதனை ஆச்சரியத்தோடு பார்த்த இலங்கைவாசிகள் சிலர் அக்காலத்துத் தம்மையாண்ட இலங்கைவேந்தன்முன்சென்று "மகாராசாவே, நாங்கள்முன்னர்க்காணுத வெள்ளைமனிதர் ஒருகப்பலில் வந்திருக்கிறார்கள்; அவர்கள் கல்லைத்தின்று இரத்தத்தைப் பருகுகிறார்கள்" என ஆச்சரியத்தோடும் அச்சத்தோடுந் தெரிவித்தார்களென இலங்கைச் சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் கல்லென்றதும் இரத்தமென்றதும் முறையே கோதுமையிற்செய்யப்பட்ட ரொட்டி (விஸ்கோத்து)களையும் உவயின் முதலிய மதுபானங்களையுமாம். ஆனதினால் இந்த அக்கியமதுபானம் ஐரோப்பியரைக் கண்டபின்பே இங்கே விருத்தியானதென்பதுவெளிப்படை.

* * *

அபிரோப்பியர் ஏதும் மதுபானத்தை உட்கொள்வது போசனத்திற்கு முந்தியென்றும், நேரக்கம் போஜனம் சீரணமாகவேண்டுமென்றும், அவர்கள் மதுபானத்தைக் குறித்த அளவிற்கு உட்கொண்டபின போஜனஞ் செய்துவிட்டுத் தன் கருமத்திற்குப் போவார்களென்றும் இதனைச் செய்வதற்குக் குறித்த நேரங்களுண்டென்றும் அபிரோப்பியருடன் ஊடாடிய நம்மவர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆனால் அவர்களைப் பின்பற்றி இந்த அந்நிய மதுபானங்களைக் குடிக்கப்பழகிய நம்மவர்களெனிலோ இடம் நோக்காது காலம் நோக்காது பொருள் வருவாய் நோக்காது, மானம் மரியாதை நோக்காது, தாம் செய்யும் கடமைகள் இறப்புமேயென்பதைநோக்காது குடிப்பதொன்றையே பிரதானமாகக் கொண்டு குடிவகையைப் போத்தற்கணக்கில் தருவித்து 'லெமனட்' 'சர்பத்' என்னுமிவைகளைத் தாகமுற்றோர் எவ்வளவு விருப்பத்தோடு பருகுகின்றார்களோ, அவ்வளவு ஆவலோடு போத்தல் மூடியைத் தட்டிவிட்டு மட மட வென்று குடித்துவிட்டு இளநீர் குடித்தவர் கோம்பையை வீசியவாறு வெறும்போத்தலை அயலே வீசிவிடுகிறார்கள்.

* * *

சிறிது நேரத்தால் உட்புகுந்த மதுபானம் தன்தொழில் செய்யத்தொடங்க, அதனை உட்கொண்ட இவர் நாகம் கொக்கு கனகிளி அனுமான் பேசும் இராவணன், பின் கும்பகர்ணன் என்ற முறையே அவர்களும் அவைகளும் செய்த தொழில்களையும் திமைகளையும் முறைப்படி செய்கிறார்கள். உத்தியோகத்தர் நியாயவாதிகளென்றிருப்பாருட்பலர் தாம் கள் சாராயம் முதலிய தாழ்ந்த குடிவகைகளைக் குடிக்கக் கருதவொண்ணுது விலையுயர்ந்த அக்கியநாட்டுக் குடிவகைகளை மேலே சொல்லப்பட்டபிரகாரம் குடிக்கலாமென்ற நியதியோடு காணப்படுகின்றார்களேயல்லாமல், தாம் வகித்திருக்கும் பொறுப்புக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளுக்கும் இந்த மதுபானம் இடையூறானது, தவிர்க்கப்படவேண்டியது, மரியாதையைக் கெடுப்பது, அவமதிப்பைக் கொடுப்பது, மேலான போக்கைத் தடுப்பது என்றன்றென்று நினைக்கின்றாரல்லர். அபிரோப்பியர் விஷயத்தில் அவர்கள் மதுபானத்தை உட்கொள்ளுகிறார்கள். இங்குள்ளார் விஷயத்தில் மதுபானம் இவர்களை உட்கொள்ளுகின்றது. இதுவே அவர்களுக்கும் இவர்களுக்கு மிடையேயுள்ள பேதம். (வரும்)

## "கல்வி விஷயமாக இந்துக்களின் கொள்கை"

—:*O*:—

(முற்றொடர்.)

[வடமாராச்சி இந்து வித்தியாசங்கத்தாரின் கேள்விப்படி ஸ்ரீநியாசர் மிஸ்ரர் அக்பார் பருத்தித்துறையிற் செய்த பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு ]

"மேலும் இந்த இலங்கையிலே புண்ணிய க்ஷேத்திரமென்று சொல்லாவதற்குள்ளும் சிறந்த புண்ணியக்ஷேத்திரமாகிய கதிர்காமம் இருக்கிறது. அந்தப் புண்ணியதலத்திற்கு நான் இரண்டு முறை போயிருக்கிறேன். அங்கே நானடைந்த மனத்திருப்தியையும் மேலான அநுபவத்தையும் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்; இன்னமும் ஒருமுறையாயினும் அந்தக் கதிர்காமதலத்திற்குப் போனேனோ என்று என்மனம் எம்பலிக்கிறது. ஆனால் என்ன செய்யலாம் போய்க்கொள்வதற்கு எனக்கு இப்பொழுது நேரமில்லை. நித்தியாநந்தம் அங்கேதான் இருக்கிறது, சஞ்சலம் விட்டகலப் பெற்றவரும் என்றும் ஆநந்தத்தோடுகூடியவருமாகிய யோகர்சுவாமிகளும் இப்பொழுது கதிர்காம யாத்திரை போயிருக்கிறார்களென்று அறியலானேன். இலங்கையே ஒரு சிறந்த நாடு; அதிலும் யாழ்ப்பாணம் இன்னுஞ் சிறந்ததாகும். யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களாகிய உங்களின் மேலான நிலைமையைக் காணும்போதெல்லாம் என்மனம் பெருமைகொள்ளுகின்றது. ஒரு மகான் உங்கள் மத்தியிலிருப்பதாகிய பாக்கியம் உங்களுக்குத்தானுண்டு. நான் இங்கே மகான் என்று கூறியது யோகர்சுவாமிகளை. யாழ்ப்பாணத்தவர்களாகிய உங்களைப்பற்றி நினைக்கும்போது என் மனதிற் பொறாமை யெழுகின்றது. யோகர்சுவாமி பொறாமை பெரும்பாவமாகும் என்று உங்களுக்குப் பலமுறை விரித்து போதித்திருப்பார். ஆனால் நான் உங்கள் மீது கொள்ளும் பொறாமை பாவமாகமாட்டாது. ஏனென்றால் நான் கொள்ளும் இந்தப் பொறாமை உங்களை மேலும் மேலும் நன்னிலையை அடையச் செய்கிறது.

மேலும் வடமாகாணத்தில் நீங்கள் ஒருங்கு இருக்கிறீர்கள். உங்கள் சாதிசமயம் சீர் திருத்தம் முதலியவெல்லாம் ஒரே தன்மையன. இதனைக்காட்டிலும் மேலான பாக்கியம் வேறென்ன விருக்கின்றது. எனது சமயத்தினராகிய இஸ்லாமனவர் இந்த இலங்கையில் காக்கைகளைப்போல எங்குஞ் சிதறி வசிக்கின்றார்கள்; ஆனால் நீங்கள் ஒரு குடும்பம்போல வடனத்தில மாத்திரமிருக்கின்றீர்கள்.

உங்கள் நாட்டிலுள்ள விசேஷம் வறுமை, இது வளம் குறைந்த நாடாயிருத்தலால் நீங்கள் உங்கள் சீவியத்தின் பொருட்டுக் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டி யிருக்கிறது. இது கடவுளால் உங்களுக்குத் தரப்பட்ட நன்மையென்றே நான் சொல்வேன். உங்களுக்கு றபர் தோட்டம் தேயிலைத் தோட்ட மிருக்குமானால் நீங்கள் இந்த யாழ்ப்பாணத்தில் இருக்கமாட்டீர்கள்; உடனே கொழும்புப்பட்டணத்திற்குப் போய் அங்கே படக் காட்சி நாடகம் முதலிய வேடிக்கைகளைப் பார்த்துக் காலங் கழிப்பீர்கள். இன்னும் அதிக பணமிருக்குமானால் நீங்கள் இங்கிலாந்திற்குப்போய் உண்டாட்டுக் களியாட்டுச் செய்து கூத்தாடுவீர்கள். இல்லையேல் உலகம் முழுவதையும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று புறப்படுவீர்கள். இச்செயல்கள்தான் ங்கள் ஆன்ம ஞானத்தைக் கெடுப்பதற்கான ஏதுக்களாகும். மேலைத்தேச வாசிகளெல்லாரும ஆநந்தம் தத்தமக் குள்ளேதானிருக்கின்றதென்பதைப் பிந்தியே உணரத் தொடங்கினர். சர்வவல்லமையுள்ள பரப்பிரமம் உங்களுக்குள்ளேயே யிருக்கிறது. இதுவே உங்கள் சமயக் கொள்கை; இதுவே உங்கள் சாத்திரங்களிற் சொல்லப்படுவது; தனித்தனி யெடுத்து யோசித்துப் பார்ப்போம். நான் சிலவற்றைப் பேசும்போது நீங்கள் துயரப்படுகிறீர்கள். சிலவற்றைப் பேசும்போது சிரிக்கிறீர்கள். இந்த அழுகையுஞ் சிரிப்பும் எங்கிருந்து பிறக்கின்றன? நான் சொல்வன ஆகாயமென்னும் பூதத்தோடு கலந்து சஞ்சரிக்கின்றது. உங்கள் உடம்பிலுள்ள ஆகாயத்தோடும் நான் சொல்வன கலக்கின்றது. இதனைக் கேட்டே நீங்கள் "இவனொரு கள்ளன்; பெரிய கள்ளன்; இவன் புகழை விரும்புகிறான்; பிறர் தன்னைத் தோத்திரிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான்" என நினைக்கிறீர்கள். இந்த நினைவை எழுப்புபவர் யார்? உங்கள் உளத்தில் அந்தரியாமியாயிருக்கும் அந்த இறைவனேயாவர். எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆண்டவன் வியாபித்திருக்கின்றாரல்லவா? இந்த வாழ்நாள் ஒரு வேடிக்கையான கருமமென்றெண்ணுகின்றீர்களா? இல்லை; ஆதலால் நாம் ஒவ்வொருக்கும் நமது கடமையைச் செய்யவேண்டும். நீங்கள் செய்யுங் கடமைகளோ தாழ்மையை விருத்தி பண்ணத்தக்கனவாயிருத்தல் வேண்டும்.

(வரும்).

## சச்சிதாநந்தராஜயோகிகள்.

பிரமஸ்ரீ சங்கரசுப்பிரமணியசச்சிதாநந்தராஜயோகிகள் திருவாலங்காட்டில் தேர்மேடைத் திருப்பணியை ஒருவாறு நிறைவேற்றியபின், நல்லூர்க்கந்தசுவாமி கோவில் மகோற்சவதரிசனத்தின் பொருட்டு நேற்று (13-8-30) காலை யாழ்ப்பாணம் வந்து நல்லூர் மேலைவீதித்திருமடத்திலிருக்கின்றார். உற்சவகாலத்தில் யோகிகள் அரியபிரசங்கங்களைச் செய்வரென அன்பர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## குமரேச சதகம். அ௯.

நற்புலவர் தீப்புலவர் செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
 விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
 வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தில்
 இருக்கின்ற தேனை நாடும்
எத்தனை சுகந்தவகை யுற்றலு மூருள்வண்
 டிவைந்துர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயே
 தாம்பார்த் துகந்து கொள்வார் [ன்று
ஈதாழ்வான வன்கண்ணர் குற்றமெங் கேயே
 தமிழிலா ராய்வர் கண்டாய் [ன்று
மைக்காவி விழிமாது தெய்வானை யுந்தறவர்
 வள்ளியுந் தழுவு தலைவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயலீடு
 மலைமேவு குமரேச னே.

இ-ள்: வனத்தோடு கூடிய சோலையிலே குயிற்பட்சியானது போய் மாம்பழத்தைத் தேடும்; செருகிய காக்கைகளெனிலோ எவ்வளைத் தித்திப்பான கனிகளிருப்பினும் அவற்றை அலட்சியஞ்செய்து வேப்பம்பழத்தைத் தேடும்; சேகைகளோடு கூடிய தேன்வண்டு எப்பொழுதும் தாமரைப்பூவிலுள்ள தேனைத் தேடி யுண்ணும்; எவ்வளவு சுகந்தமான பெருள்களிருப்பினும் உருள்வண்டுக் கூட்டம் மலத்தையே தேடும். அறிவுடையோர் தமிழ்நூல்களில் எங்கெங்கே (சொற்சுவை) பொருட்சுவைகள் உள்ளனவென ஆராய்ந்து மெய்ச்சுவார்கள்; கீழான இயல்புள்ளவர்கள் இய கயவர் தமிழ்நூல்களிற் குற்றமெங்கேயுள்ளனவெனத் தெரிப்பர், அஞ்சனந்தீட்டப்பெற்ற கண்களையுடைய தெய்வானையம்மையாரும் வள்ளிநாயகியம்மையாரும் தழுவுந் தலைவரே, மயிலேறிவிளையாடு குகனேபுல வயலீடு மலைமேவு குமரேசனே-எ-று.

## கள்ளுக்கு மரவரி.

வட இலங்கைத் தொழிலாளர் சங்கம் கூடியபோது அக்கூட்டத்திற்குத் தக்கிச் சமாசாரம் அனுபியவர்களாகும் கௌரவ பாலசிங்கம், கௌரவ சந்திரசேகரா ஆகியவர்கள் மரவரி ஏற்படுத்துவது மிகவும் விரும்பத்தக்கதெனத் தெரிவித்திருக்கின்றனர்.

## அபின்.

அநுராஜபுரத்திலிருந்து அபின் சோரமாகக் கொண்டுவந்த அப்துல்காதர், ஆனுமரக்காயர், வீரசிங்கம், தங்கராசா என்னும் நால்வர் பொலீசாரால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் விசாரிக்கப்பட்டனர் விசாரணை 14-8-30-க்கு தவணை போடப்பட்டிருக்கின்றது.

## ஒட்டகப்புலம் சமரசன வழக்கு.

ஒட்டப்புலத்தின் தமிழ் வித்தியாசாலையைப்பூட்டிவைத்ததாகவும், பின் அதற்குத் தீவைத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட 7 கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் விசாரணையின்பின் நிரபராதிகளாக (22-7-30) விடுதலைபெற்றனர் சமாசனவிஷயமாகவே இவ்வழக்கு உண்டாயதென அறிகின்றோம்.

## புத்தளத்திற்குப் பட்டின பரிபாலன சங்கம்.

சுதேச ஆட்சிச் சங்கத்தார் புத்தளத்திற்கு ஒரு பட்டின பரிபாலன சங்கம் நிறுவுவதற்காகவேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றனரென அறிகின்றோம்.

## பந்தயச்சட்டம் நிறைவேறிற்று.

எமது சட்ட சபையிலே மேற்படி சட்டம் 5பேருக் கெதிராக 30பேரின் சம்மதத்துடன் நிறைவேறிற்று. இனிச் சில்லறைப் பந்தயக் கடைகளெல்லாம் நீக்கப்பட்டுவிடுவனவாகும்.

## எமது சர்வ கலாசாலை

கௌரவ: விறீமன் மேற்படிவிஷயமாக சட்டசபையிலே ஒரு கேள்வி கேழ்க்கப் போவதாக அறிவித்தல் கொடுத்திருக்கின்றனர் அதாவது "இச்சட்டசபை, இப்போதைய பணச்சுருக்கத்தை உத்தேசித்துச் சர்வகலாசாலைச் சட்டத்தை சபையிற் கொண்டுவருவதைப்பற்றி இன்னொருமுறை யோசனை செய்வார்களா?" என்பதாம்.

## தபால்வருமானத்தில் பெருங் குறைவு.

முன்வருடத்திலும்பார்க்க இவ்வருடத்திலே தபாற்பகுதி வருமானம் 12,28 342 ரூபா இறக்கமாக விருக்கின்றதென்றும், இது தபாற்பகுதிஉத்தியோகத்தினரதும் பொதுசனங்களினதும் திருட்டு வழிவகைகளினால் பயந்து சனங்கள் சேமித்துவைத்திருந்த பணங்களையெல்லாம் விரைந்து எடுத்தமையினாலும் உண்டாயதென்றும் தபாற்பகுதித் தலைவர் அறிக்கையிடுகின்றனர்.

## தொழிலின்மை.

இலங்கையிலே தற்சமயம் தொழிலற்று இருப்போர் தொகை மிக்க அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை யோசிப்பதற்காக ஒரு சிறுசங்கம் பகிரங்கக் கூட்டத்திலே நியமிக்கப்பட்டிருக்கின்றது.

## படிப்பற்ற வாலிபர்.

படிப்பற்றவர்களாகும் வாலிபர்களைச் சாயந்தரவேளைகளிற் படிப்பிப்பதற்காக இலங்கையிலே 9 இடங்களில் பாடசாலைக் கூடங்கள் சோதனார்த்தமாக ஸ்தாபிக்கப்படல்வேண்டுமென்று வித்தியாசங்கம் தீர்மானித்திருக்கின்றது.

## மட்டக்களப்பு நெல்லு

இதை விளைப்பொருளாக்குவதற்கான வழிவகைகளை யோசித்து அறிக்கை பண்ணுமாறு நியமனம் பெற்ற சிறுசங்கத்தில் ஓர் அங்கத்தவராகக் கௌரவ தம்பிமுத்துவும் நியமனம் பெற்றிருக்கின்றனரென ஓர் அரசாட்சியறிவித்தல் கூறுகின்றது.

## ஓர் தமிழ்மாதின் சங்கீத விற்பன்னம்.

நீதிபதியாயிருக்கும் ரூஉபகுரே முத்துசாமியரின் மருகியும், மிஸ்டர் C R. அரசரத்தினத்தின் புதல்வியுமாகிய மிஸ் மார்கறற் என்பவர் லண்டன் உயர்தரச் சங்கீதச்சோதனையில் முதலாம் வகுப்பிற் சித்திபெய்தியிருக்கின்றனராம்.

## இலங்கையை விளம்பரப்படுத்தல்.

பிரான்ஸின் தலைநகராகும் பாரிஸிலே நடக்கவிருக்கும் பொருட்காட்சியிலே ஒரு சிறு குடிசை சமைத்து அதிலே இலங்கையின் சிங்களர்கள் சுதேச உடையணிந்தவர்களாக நின்று வழங்குவதற்கு ஒரு தேநீர்ச்சாலையொன்று அமைப்பதாகத் தீர்மானம்பண்ணப்படிருக்கிறது.

## நியாயதுரந்தர ஆவலியிலிருந்து நீக்கப்பட்டார்.

கள்ளக்கையொப்பமிட்டதும் ஆணைப்பிணதும் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு, இப்போது வெலிக்கடைமறியற்சாலையில் 3 வருடக் கடின வழியச் சிறைவாசம் செய்யும் விக்டர், லெஸ்லிசெல்டன் சுவான் என்னும் நியாயதுரந்தரர், குறித்த ஆவலியிலிருந்து நீக்கப்பட்டனர்.

## கொழும்புக்கு ஓர் மத்திய சந்தை.

தற்காலத்திலே உலகத்திலுள்ள பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சந்தைகளுக்கு விட்டுக்கொடாத ஒரு புதிய சந்தைக்கட்டிடத்தைக் கொழும்புக்கு அமைப்பதாக அந்த நகரசங்கம் தீர்மானித்திருக்கின்றது. இச்சந்தை 25 லட்சம் பெறுமதியுள்ளதாகக் கட்டப்படுமாம்.

## பின்னும் 200 வித்தியாசாலைகள்.

சென்ற வருடத்தில் ஏற்கனவே யுள்ள பாடசாலைகளுக்கு மேலதிகமாக 200 பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிதமாகி யிருக்கின்றனவென்றும், 30,000 மாணவர்கள் இப்பொழுது ஏறுபடியாக விருக்கின்றமையினாலும் 6,70000 ரூபா வித்தியாபகுதிச் செலவுக்கு மேலதிகமாக உதவப்படல் வேண்டுமென சட்டசபை கேட்கப்பட்டிருக்கின்றது.

## வழக்கு விசர்.

6தென்னைகளைக்குறித்து 3வருடக்காலமாகக் கோட்டிலே வியாச்சியம் நடத்திய இருபகுதியாரையும் டிஸ்திறிக் நீதிபதி டக்டர் போல் பீரிஸ் நோக்கி இது மிகவும் அருவருக்கத்தக்கமுயற்சி யென்று கூறினர். அவர்கள் சமாதானமாகப் போவது சந்தியாத காரியமென நியாயதுரந்தரரொருவர் கூறக் கேட்ட நீதிபதி பின்னரும் அவ்வழக்கைத் தவணைபோட்டனர்.

## இலங்கை இந்திய வியாபாரிகள்.

இலங்கையிலே வியாபாரம் செய்யும் இந்தியர்களியாவரும் ஒன்றுகூடி இந்திய வியாபாரிகள் சமுதாயமென ஓர் சமுதாயத்தை யுண்டாக்கி அதைப் பதிவு செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றனர். E. G. ஆதம்அலியை அக்கிராசனராகக் கொண்ட ஒரு சிறுசங்கம் ஆகவேண்டிய வழிவகைகளைச் செய்துகொண்டு அங்கத்தினர்களைப் பதிவு செய்து கொண்டும் வருகிறது.

## "ஆங்கிலேயர்போற் கைகுலுக்கிச் செல்லுங்கள்"

பாணந்துறைப் பொலிஸ் நீதிபதி ஸ்ரீ வைத்தியலிங்க மவர்களின்முன்பு விசாரணைக்குவந்த ஒரு காணிவழக்கின்கட்சிக்காரரை நோக்கி, நீதிபதி மேலே காணப்படும் வசனத்தைக் கூறி இருகட்சியாரையும் கை குலுக்கப்பண்ணிச் சமாதானமாக்கி யனுப்பிவிட்டனராம்.

## பரிசுத்தவெள்ளரசுக்குஅபிடேகம்.

31-7-30ல் அனுராசபுரத்திலேயுள்ள வெள்ளரசுக்குத் நீஸ்ஸவீவா வாவியிலிருந்து எறக்குறைய 300 பேர்வரையில் குடங்களில் நீர் நிறைத்துவந்து அபிடேகம் பண்ணினார்களாம். சொற்பகோத்தான் ஒருசிறுமழை அவ்விடத்திற் பெய்ததாம் இற்றை 15 வருடங்களுக்குமுன் இப்படியாக அபிடேகம் பண்ணினால் ஒருபெருமழை வருஷிப்பது வழக்கமென்று குருசாமியொருவர் தெரிவிக்கின்றனர்

## புகைரதப்பகுதியாரின் தாயவிநிகைகள்.

விவாகவிஷயமாக, மரக்கவிஷயமாகச் செல்லும் கூட்டத்தாருக்குப் போகவர ஒரே செலவில் பிரயாணவசதியும், பழவகைகள் தீன்பண்டங்கள் முதலானவைகள் முன்செலவுகட்டாமலே ஏற்றுமதி பண்ணவும், காய்கறி வெற்றிலை முதலியவற்றிற்கு முன்னதாகவே செலவுகட்டுதல் அல்லது ஒரு தொகைப்பணம் கட்டுதல் இன்றி அனுப்பவசதியும் உண்டாயிருக்கின்றது

## ஸ்ரீ H. சட்டோபாத்தியாய.

சரோஜனி தேவியின் சகோதராகும் இவர் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிப் போகும் வழியில் கொழும்பில் 29-7-30-ல் வந்து சேர்ந்தனர். இவரைச் சந்தித்த பத்திரிகா நிருபர்கட்கு இவர்தெரிவித்தசெய்திகள் பின்வருவன:

"தெரிந்தோ தெரியாமலோ பிறனொருவன் உங்களுக்கு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்து உங்களிடம் புகுத்தி விடுவதற்கு இடங்கொடாதேயுங்கள். சிவியத்தை ஒறுப்பனவாகச் சீவியுங்கள். ஒரு லோபி தனது பொக்கிஷத்தை எவ்வாறு கட்டிப்பிடிக்கின்றானோ அவ்வாறே உங்கள் சொந்த வித்தைகளைப் பேணுங்கள்.

இந்தியாவிலே செல்வர்களுக்காக நாடகசாலைகளை உண்டாக்குவது அவசியமற்ற செயலாகும். நான் பொதுசனங்களுக்காகவே ஒரு சாலை ஸ்தாபிதம் செய்ய நினைத்திருக்கிறேன். அதில் பொது சனங்களின் பசி, பஞ்சம், சாதாரம் முதலியவற்றைப்பற்றிய நாடகங்கள் நடிக்கப்படல் வேண்டும்.

இந்தியாவிலே நடக்கும் சாத்வீகப்போரில் நான் கலக்கப் பிரியப்படவில்லை ஏனெனில் அதில் கலக்கப் பிரியப்பட்டால் சிறைக்கோட்டத்தில் அடைதலடையலாம். ஆனால் நான் அரசாட்சியாரைத் தொந்தரவு படுத்துவதாக உத்தேசிக்கவில்லை ஏனெனில் சிறைக்கோட்டங்களில் இடம்போதிய அளவு இல்லை" என்று கூறினராம்.

## மலிவான பெற்ரோல்."

சுத்தப்படுத்தாத மண்ணெண்ணெயிலிருந்து "பெற்ரோல்" எடுக்கும் ஒரு நவீன வழிகண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதென்றும் அதனால் இனி அது மலிவாக விலைப்படும் என்றும் ஒரு லண்டன் செய்தி கூறுகின்றது

## சிறையாளர் மாற்றம்.

பம்பாயிற் சிறைக்கோட்டத்திலிருந்து 100 க்குமேற்பட்ட தொண்டர்கள் திருச்சினப்பளிச் சிறைக்கோட்டத்திற் கனுப்பப்பட்டிருக்கின்றனர். (26-7-30.)

[அங்கு சிறைச்சாலைகள் நிறைந்துவிட்டன போலும்.—பர்.]

## இராணிக்குமுத்தமிடஎத்தனித்தல்.

ருஷியாவிலே நோக்தா யாத்திரை செய்துகொண்டிருந்த அங்கன் பழைய அரசர் அமானுல்லா, அங்கு தமது பத்தினியாரை ஒருருஷியன் முத்தமிட எத்தனித்தமையாற் சினங்கொண்டு தாம் புறப்படுவதாக நியமித்திருந்ததற்கு 3 நாட்களின்முன் நிடீரெனப் புறப்பட்டனராம். அத்தருஷியன் தற்கொலைசெய்தனனெனத் தெரிகிறது.

## வட்டமேசைச் சமாஜம்.

வரப்போகும் வட்டமேசைச் சமாஜத்திற்கு அங்கில அரசாட்சிக்கட்சிக் கெதிர்க்கட்சிக்காரர்கள் தனித்தனி பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் உரிமையுடையரவரென்றும், அரசாட்சிக் கட்சியாகிய தொழிலாளர்கட்சியே அச்சமாஜ நிர்வாகங்களைக் கையாளும் முழு உரிமை யுடையாராவரென்றும் ஆங்கிலப் பிரதம மந்திரியார் கூறியிருக்கின்றனர்.

## அதிகௌரவ ஸ்ரீநிவாசசாஸ்திரியார்-P. C.

லண்டன் பட்டணத்திலே 22-7-30ல் பேசியபோழுது இந்த இந்தியப்பெருமகனர் "ஆங்கிலேயச் சிறுகட்சியார் இந்தியச் சிற்றரசர்களைத் திருத்திப்படுத்திவிட்டு இந்திய அறிவாளிகளைப் புறக்கணிப்பது பிருத்தானியாவையும் இந்தியாவையும் முடிவுகாண ஒரு பெருஞ் சமரில் இழுத்து விடுவதாய் முடியும்" எனப் பேசியிருக்கின்றனர்.

## எகிப்துதேசத்தில் காந்திமதம்.

கைரோப் பட்டினத்திலே ஆஆட் அரசர் ஒரு பாராளுமன்றக் கூட்டம் கூட்ட மறுத்தபொழுது, உப அக்கிராசனரின் தலைமையில் ஒரு பாராளுமன்றம் கூட்டப்பட்டு அதில் அரசாட்சியில் நம்பிக்கையின்றெனத் தீர்மானம் நிலைவேற்றப்பட்டது. கூட்ட முடிவில், வரிகொடா இயக்கத்துடன் ஒத்துழையாமை உடனே தொடங்கப்படல் வேண்டுமெனத் தீர்மானம் நாகஸ்பாஷாவினால் பிரசித்தப்படுத்தப்பட்டது.

## காந்தியும் கீதையும்.

"நான் இப்பொழுது பெலவீனப்பட்டிருப்பதினால் கைராட்டினத்தில் அடுத்து 4 மணிநேரம் வேலைசெய்ய முடியவில்லை. நான் இப்போது பாவனுவலியை மொழிபெயர்ப்பதில் முயற்சியுடையேன். ஆனால் எனது வேலை ஒருகத்தையின் நீவிரத்திற்றான் போகின்றது. இப்போதிருக்கும் ஆறுதல் இன்னுங் கிடைக்குமேல் பகவத்கீதையையும் மொழிபெயர்ப்பதற்கு விரும்புகிறேன்" என மகாத்மா ஸ்ரீமதி மீராபாய்தேவிக்கு எழுதிய கடிதமொன்றிற் குறிப்பிட்டிருக்கின்றனர்.

## வின்ரர்ரன்பிரபுவுக்கு ஒருகடுமொழி.

சேர் பிரான்ஸிஸ், யங்கஸ்பண்ட் என்பார் லண்டன் டைம்ஸ்பத்திரிகையில் ஷெ பிரபுவுக்கு உத்தரமாகப் பின்வருவனவற்றை எழுதியிருக்கின்றார்:-இந்தியர் தன்னைத்தானே உலகமதிப்பில் உயர்த்திக்கொள்வதற்கு நாம் செய்யக்கூடியதெல்லாம் செய்யவேண்டும். எல்லாச்சாதியாரலும் தனக்கு நன்குமதிப்பைப் பெறக்கூடியதாக இந்தியா இப்போ டக்ரர் தாகூர் போன்ற பெரியார்களை உண்டாக்குகின்றது. சில இலச்சியங்களில் விரும்பத்தக்கதன்றாயினும். இந்தியா இப்போது ஒரு தேசிய உணர்ச்சியைப் பெறுகின்றது; அது ஒருசேர நோக்குமிடத்து நல்லதாகவேயிருக்கின்றது. உலகவிஷயத்தில் இந்த உணர்ச்சிபலனை விஷயத்திற்றிருப்பிவிடலாம். அவ்கனியர்களுக்கும் மற்றும் எல்லைப்புறச்சாதியாருக்குத் தடையாயிருக்கக்கூடிய ஒருதேசியச் சேனையை நாம் உண்டாக்கலாம். இந்தியா எப்போதாவது பூரண சுயமரியாதையும் பூரணசுயஆட்சியும் அடைவதேயானால், நாமும் எமது பூரண சுயமரியாதையையும் இழந்துவிடாது வைத்திருப்பதேயானால், இந்தியா பொறுப்புள்ள சுவய ஆட்சியை அடையுங்காலத்தில் அது தான் ஏகாதிபத்தியத்துள் அடங்கியிருப்பதோ அல்லவோவென்பதையும் தானாகவே தீர்மானம்பண்ணுதல்வேண்டும். என்பதாம்.

## வதிரி தேவரையாளிச் சைவவித்தியாசாலையாரின் அண்ணமார் ஆலயத்தில் வேள்வி.

—:※:—

ஷெ ஆலயத்தில் அநேக காலம் வழங்கிவந்த புலைச்செயலாகிய ஆடு கோழி வெட்டிப் பலியிடும் அநாசார முறையைத் தடுத்துச் சுத்த சைவாசார பத்தியோடு நிகழும் பிரமோதூத வருஷம் ஆனிமீ 27௳ (11-7 30) நடந்தேறிய வேள்வி நான்காவதாகும். இச் சந்நிதியை முதன் முதற் கையாண்டபொழுது நாமவரில் அநேகருக்கு உள்ளத் திருப்தியற்றிருந்தும், இப்போது இச்செயல் புகழும் புண்ணியமும் உடையதென மிகு ஆர்வத்தோடு போற்றி நிற்கின்றனர்.

தற்போது சமாசன விஷயமாகப் பத்திரிகைகளில் எழுதுவோர் சிலர், தாழ்ந்த சாதியார் செயற் சிறப்பற்றவர்கள் என்றும் சிறீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் அவர்கள், தாழ்ந்த சாதிப் பிள்ளைகளைத் தமது பாடசாலையிற் சேர்க்காது விட்டனர் என்றுஞ் சொல்லி, நாவலர் தங்களுக்குக் காட்டிய வழியும் அதுவே யென்று (அதை) விதி காட்டுகின்றார்கள். அதுமெய்யேயானால் செயற் சிறப்பற்ற தாழ்ந்த சாதியார் வழக்கமாயினுஞ் சிறப்பற்ற செயலெனச் சித்தர் தெளிந்த ஆலய சந்நிதியில் ஆடு, கோழிகளை அலறத் துடிக்க வெட்டி அநியாயஞ் செய்யும் அக்கிரமச் செயலை நீக்கலர, செயற் சிறப்புடையார் எனக் கொண்டிடும் உயர் சாதியினர் தங்கள் நற் சைவாலயங்களில் (அனவெட்டு சன்னதம், உரு பாய் முதலிய ]னர்களி

## ஆவணிமாச விசேஷ தினங்கள்.

௧௳ (17-8-30) ஞாயிறு, கார்த்திகை விரதம்.
௫௳ (21-8-30) வியாழன், பிரதோஷவிரதம்.
௬௳ (22-8-30) வெள்ளி, செருத்துணை நாயனார் குருபூசை.
௭௳ (23-8-30) சனி, அமாவாசைவிரதம்; நல்லூர் கந்தசுவாமி கோயில், திருக்கோணமலைவில்லூன்றி கந்தசுவாமிகோயில் மகோற்சவம்; அரிபத்த நாயனார், புகழ்த்துணை நாயனார் குருபூசை.
௮௳ (24-8-30) ஞாயிறு, ஷெ கோவில்கள் தீர்த்தோற்சவம்; இளையான் குடிமாறநாயனார் குருபூசை.
௯௳ (25-8-30) திங்கள், நல்லூர்கந்தசுவாமி கோயில் பூங்காவன உற்சவம்.
௰௳ (26-8-30) செவ்வாய், மறைஞான சம்பந்தர் திருநாள் கொட்டியாபுரம் வெருகல்சுத்தரவேலாயுதசுவாமி உற்சவாரம்பம்.
௧௧௳ (27-8-30) புதன், விநாயக சதுர்த்தி; சாமவேத உபாகர்மம்.
௧௨௳ (28-8-30) வியாழன், சிவியா தெரு சித்திவிநாயகர்கோயில் உற்சவாரம்பம்.
௧௩௳ (29-8-30) வெள்ளி, நெடிய காட்டுப் பிள்ளையார், வைரவிட்டி கனையவிற் பிள்ளையார், வவனியா மருகோடைக் கந்தசுவாமி, மண்டைதீவு சித்திவிநாயகர் உற்சவாரம்பம்.
௧௫௳ (31-8-30) ஞாயிறு, குலச்சிறை நாயனார் குருபூசை.
௧௬௳ (1-9-30) திங்கள், ஆவணிமூலர்.
௧௭௳ (2-9-30) செவ்வாய், குங்கிலியக்கலய நாயனார் குருபூசை.
௨௦௳ (5-9-30) வெள்ளி, பிரதோஷ விரதம்
௨௨௳ (7-9-30) ஞாயிறு, பூரணை விரதம், தொண்டமனாறு செல்லச்சந்நிதி தீர்த்தம.
௨௩௳ (8-9-30) திங்கள், மஹாளய பட்ச ஆரம்பம்.
௨௮௳ (13-9-30) சனி, கார்த்திகை விரதம்.
௨௯௳ (14-9-30) ஞாயிறு, பொன்னாலை வரதராசப் பெருமான ரதோற்சவம்

## தேகவியோகம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவரும், கிளாஸ்கோ சர்வகலாசாலையில் அளவைப் பகுதிக் கல்வி பயின்றவருமாகிய யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஸ்ரீ.நல்லதம்பி பொன்னம்பலம் மென்னும் வாலிபர். சுப தினம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு மீண்டு வந்தார், நோயதிகரிக்க இந்த ஆக்கஸ்மாட 12௳ தமது கிருகத்தில் தந்தை சுற்றமித்திரர் துயருற்றுப் புலம்ப இவ்வுலக வாழ்வை யொருவினர். இவருக்கு இறக்கும்போது வயசு 24. இவர் மரணம் பெரிதும் பரிதாபப்படத்தக்கது.

நிகழும் ஆடிமீ ௨௫௳ ஞாயிற்றுக்கிழமை (10-8-30) காலை 7மணியளவில் துப்பிளான் ஸ்ரீ மான் வைத்தியநாதர் சுப்பையா காத்திராப்பிரகாரங் கண்ட சிவாதநோய் காரணமாகத் தேகவியோகமாயினர். இவர் அன்பு, பத்தி, நீதி, நேர்மையாதியாம் அருங்குணங்களமையப்பெற்றவர். ஸ்ரீ காசி முதலிய திவ்விய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து திரும்பியவர். துப்பிளான் விக்கினேசுவா வித்தியாசாலைத்தாபகர்களுலொருவர். அதன் ஆசிரியர்களுளொருவராய் அமர்ந்து அதன் முன்னேற்றத்திற்காகப் பெரிது முழைத்தவர். துறைவேலையாகவிருக்கும் 'சோக்கவளவு'க் கற்பகப்பிள்ளையார் கோயிற் கட்டடவேலையை அதன் மனேஜராகவிருந்து அதிசிரத்தையோடு நடப்பித்து வந்தார். கிராமச்சங்க அங்கத்தவராயிருந்து தமது கடமையைச் செவ்வனே பார்த்துவந்தவர். Proctor ஸ்ரீ மான் வ. தம்பிராசாவுக்கும் சகோதரருக்கும் நன் மாமனுகவுள்ளவர், சமீபத்தில் தாயாரோடு கதிர்காமயாத்திரை செய்து சுடுதியிற் கண்ட சுகவீனங் காரணமாக முதலே வீட்டுக்குத்திரும்பியவர். இவரைப் பிரிந்து பிரலாபிக்கும் இவரது பிதாமாதா, மனைவி மைந்தர், சுற்ற மித்திரர் ஆதியவர்களுடன் நாமும் அனுதாபப்படுகிறேம். கடித.

## இந்திய பிற்செய்திகள்.

பம்பாய், 13—8—30.

பெஷாவரிலே வர வர அதிகம் நெருக்கடியான நிலைமை ஏற்படுவதைக்கண்ட அரசாட்சியார் அங்கே எலவே இருக்கும் சேனைக்குத் துணையாக இன்று ஏறுபடியாகச் சேனையை யனுப்புகின்றனர்

ஆகாயவிமானங்களும் அதிகப்படுத்தப் பட்டன

எல்லைப்புறத்திலுள்ளாரில் வைதரியசாலிகளும உரமுடையாருமான 40000 சனங்களைக் கொண்ட திரு என்னும் இடம் முழுவதிலும் இவ்வதிர்ச்சி பிடித்திருக்கின்றது. கைபர் பாஸுக்கு வடக்கேயுள்ள மலைவாசிகளான மோமாண்ட்ஸ் என்னும் சாதியாரிலும் இவ்வதிர்ச்சி பரவுகின்றது.

இந்த இடங்களிலிருந்து கடைசியாகக் கிடைத்த சமாசாரத்தின்படி புதினம் நன்மையானதும் நிலைமையானதுமாக விருக்கின்றது

பெஷாவரிலே 12 8-30ல் 6000சிறு வெடிக் குண்டுகள் ஆகாய விமானங்களினுல போடப் பட்டன.

பம்பாய், 12 8-30.

இரண்டுமாதக் காலமாக விடுபட்டிருந்த உப்புச் சட்டமீறலை ஆமதபாத்திலே இன்று ஆரம்பிக்கப்பட்டது தொண்டர்கள் ஒருகையணியில் உப்பை எற்றிக்கொண்டு வீதிகள்தோறும் விற்றுக்கொண்டு சென்றாரகள் பொலிசார் தடுத்து அடித்தனர் உப்பு பறிமுதல் ஆக்கப்பட்டது. பொலிசார் இவ்வியக்கத்தில் அரசாட்சியாருக்காக வேலைசெய்யக் கூடாதென்னும் கருத்தமைந்த இரண்டு பத்திரங்கள் பரப்பப்பட்டன இது சம்பந்தமாக 74 தொண்டர்கள் கைதியாக்கப் பட்டிருக்கின்றனர்.

சென்னை, 12 8-30

பண்டாரங்கம், நடேசன், ஜெபரும் ஆதியோராம தொண்டர்கள் சத்விக ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்ததாகப் பொலிசார் தடியடிசெய்தனர் பாண்டரங்கம் படுகாயமுற்று வைத்தியசாலையிற் கிடக்கின்றார்.

### வெளியூர்ச் செய்திகள்.

திருக்கிப் பட்டாளம் போர்சிய எல்லைக்குட் புகுந்து அகிரிடாவெல் சரிவில் பாளையம் போட்டிருக்கின்றது.

### சீனி.

ஒல்லாந்தருடைய கிழக்கு இந்தியாவிலே 1000000டன் சீனி குதங்களில் கிடக்கின்றன. சீனு தேசத்திலே வெள்ளி விலையிறங்கியமை காரணமாக, சீனி விலைப்படமாட்டாது இந்திய நிலைமை இன்னும் அமைதிப்படவில்லை. கியூபாவென்னும இடத்திலே பெருந்தொகையான சீனி இருப்பு இருக்கின்றது ஆகவே சீனிச் செய்கைத்தொழில் கஷ்டமடையும் என்பது தெரிகிறது.

### காந்திநேரு சம்பாஷணை.

பம்பாய், 12—8—30.

சேர் தெஜபகதூர்சப்புறு அலகபாத்திலிருந்து இன்று வந்து M R. ஜெயக்காருடன் பூனுவுக்குச் சென்றிருக்கின்றனர். காந்திக்கும நேருநேருக்களுக்குமிடையில் சம்பாஷணை இன்று யரவாடாச சிறைக்கோட்டத்தில் நடைபெற்றது. யர்வாடாவிலிருந்து சமாசாரம் இன்று இரவு கிடைக்குமென்று சப்புறுவும ஜெயக்காரும் காத்திருக்கின்றனர்.

சென்னை, 12—8—30

சென்னை நகரசங்கத்திலே சத்தியமூர்த்தி, நகரசங்கத் தேவைகளுக்கு பிரிட்டிஷாரின பொருள்களை வாங்ககூடாதெனவும், அவசியம்நேரில் சங்கத்தின் அனுமதியுடனே பெறுதல்வேண்டுமெனவும் ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர் இதைப்பற்றிய விவாதத்தின்பின் சபாநாயகர் இதற்குத் தமது முடிவை அடுத்த கூட்டத்தில் தருவதாகக் கூறியருக்கின்றனர்.

## வித்தியா விநோத விவேகம்.

[வண்ணை: வை. இ.]

17-7-30ல் வி. சின்னத்துரை ஆசிரியனின் 3-ம் வினுவுக்கு சி. சண்முகம் மாணவன் கோப்பாய் அளித்தவிடை.

**வெண்பா.**

(சமுத்திரத்தைக் குறிக்குஞ்சொல் எழிடம்வா) செய்யுள்.

சக்கரத்தைச்சுற்றித்தனிச்சக்கரவிரதஞ் [சூழ்
சக்கரமாய்ச்செல்லிரவிதன்னொளிசேர்—சக்கரஞ்
சக்கரதின் மேதையாற் சக்கரமாய்ப்போற்று
சக்கரத்தோ னன்றோநான் றுன். [மொரு

(இ-ள்) சக்கரத்தைச் சுற்றி—மேருமலையைச் சுற்றி, தனிச் சக்கர இரதம்—ஒற்றைச் சில்லுடையரதத்தில், சக்கரமாய்ச்செல்—வட்டமாய்ச் செல்கின்ற, இரவி தன் ஒளி சேர்—சூரியனது கிரணம் வீசப்பெற்றதும், சக்கரஞ்சூழ் சக்கரத்தில்—சமுத்திரத்தாற் சூழப் பெற்றதுமாகிய பூமியில், மேதையால்—அறிவுடைய ஞானிகளால், சக்கரமாய்ப்போற்றும்—பெருமையுடைத்தெனத்துதிக்கப்படுகின்ற, ஒருசக்கரதோன்—ஒப்பற்ற மக்கட்பிறப்பை எடுத்தவன், நான் தான் அன்றோ—நானல்லவா.

ஷெ வினுவுக்கு த. பாலசுப்பிரமணியக் குருக்கள், கணடி அளித்த விடை.

அப்புயிரெத்திரமலையாழி யுலகிற்
செப்பரிதாம்பலவேலை செய்திறத்தா
லிப்பாப்புலகோரெய்திய பயனை
யப்பரவையனைத்தாமெனின் மிகையாமோ.

அப்பு—சீர், உயிர் ஆவி, (சீராவி) யந்திரம்—யந்திரம் அலையாழி உலகில்—அலைகளையுடைய கடல்சூழ் உலகத்தில், செப்பரிதாம்பல—சொல்லுதற்கரிய பலவேலை செய்திறத்தால்—வேலைகளுக்குதவி செய்கின்ற தன்மையினுல், இப்பாப்புலகோர்—இந்தப் பாரிருக்கின்ற உலகத்தவர்கள், எய்தியபயனை—அடைந்த பிரயோசனத்தை (க்கூறுகில்)அப்பரவை யனைத்தாம்—அந்தக் கடலுக்குச் சமானமாகும்—எனின் மிகையாமோ—என்று (வியந்து) சொன்னுல், கூடுதலாய்ப் போமோ.

பி. வைரையா, V. S L. C. மாணவன் உடப்பு.

(24-7-1930-ல்) வெளிவந்த இந்துசாதனம் 5ம் பக்கத்தில் குறித்துள்ள ஐயவினுக்களில் 1-ம் 2-ம் 3-ம் 4-ம் கேள்விகட்கு விடைகள்:—

1-ம் கேள்விக்கு விடை.

ஒருவன் சில மாதங்களாய் வியாபாரத்தில் ஒரே ரீதியாய் மாதந்தோறும் 5 ரூபாய் நட்டமடைகிறான் என்றுகொண்டு இப்போதிலிருந்து 4 மாதங்களுக்குப் பின்னும் 4 மாதங்களுக்கு முன்னும் அவன்வியாபார ஆஸ்தியை மதிப்பிடுவோம்.

காலங்களை இப்போதிலிருந்து
+4 மீ
—4 மீ எனக்கொள்க.
வியாபார ஆஸ்தியின் மாறுதல்களை
—5 × (+4) உம்
—5 × (—4) உம் உணர்த்தும்.

ஆனல் 4 மாதத்துக்குப்பின் ஆஸ்தி 20ரூபா குறைந்திருக்கு மென்பதும் 4மாதத்துக்கு முன் 20 ரூபா மிகுந்திருக்கு மென்பதும் வெளிப்படை. ஆகையால்,

(—5)×(+4)=—20 ரூபா
(—5)×(—4)=+20 ,,

ஆகையால்—(சய)× (தா)—(சய)=+(சக)

2-ம் கேள்விக்கு விடை.

மேற்படி உதாரணத்தில் மாதந்தோறும் 5ரூபாய் லாபமடைந்துவரும் ஒருவனுக்கு 4 மாதங்களுக்குப் பின்னும 4 மாதங்களுக்கு முன்னும் அவன் வியாபார ஆஸ்தியை மதிப்பிடுவோம்.
4 மாதம்பின் ஆஸ்திமதிப்பு 20ரூ ஏறியிருக்கும்
4 மாதம்முன் ,, ,, 20ரூ இறங்கியிருக்கும் என்பது வெளிப்படை.

ஆகையால் (+5)×(+4)=+20
(+5)×(—4)=+20
ஆகையால் =(சக)×(தா)+(சக)=+(சக)

3-ம் கேள்விக்கு விடை.

ஒரு சிறுவனிடத்தில் ரூபா 15 இருக்கிறது. அவன் பள்ளிக்கூடத்துக்குச் சம்பளங்கட்ட ஒரு பத்து ரூபா நோட்டைக் கொடுத்து 4ரூ திரும்ப வாங்கிக் கொள்கிறான். பள்ளிக்கூடத்துக்குக் கொடுத்தது ரூபா(10—4) ஆகையால் அவனிடமிருந்த மிச்சக்காசு ரூபா15—(10-4) 10 ரூபா நோட்டைப் பள்ளிக்கூடத்துக்குக் கொடுத்தபின் சிறுவனிடமிருந்தது 15—10ரூ

4 ரூபா திரும்ப வாங்கிக்கொண்டபின் இருந்த தொகை 15—10+4 இவ்விரண்டு முடிவுகளையும் ஒத்துப்பார்த்தால் 15—(10—4) = 15—10+4 என்பது வெளிப்படை. ஆகயால் பிறை வடிவுக்கு முன்—(சய) எனனும் அடையாளம் வந்தால் பிறை வடிவுக்குள்ளிருக்கும் அடையாளங்கள் மாறுதலடையும்.

4-ம் கேள்விக்குவிடை.

ஒரு சிறுவன் கடைக்குப்போய் முதற்கடையில் 8 ரூபாய்க்குப் புத்தகமும் 2ம் கடையில் 10 ரூபாய்க்கு வேஷ்டியும் 12 ரூபாய்க்குச் சால்வையும் வாங்கினன்.

அவன் 2-ம் கடையிற் செலவிட்டபணம் ரூபா (10+12)
ஆகையால் 2 கடையிலும் செலவிட்டமொத்தம் 8+(10+12)
சால்வை வாங்குமுன் செலவழித்தது. 8+10.
சால்வை வாங்கியபின் செலவழித்ததொகை. 8+10+12

இவ்விரு மொத்தங்களையும் ஒத்துப்பார்த்தால் 8+(10+12)=8+10சக12 என்று தெளிவாகிறது,

ஆகையால பிறைவடிவுக்குமுன் +(சக) என்னும் அடையாளம் வந்தால் பிறைவடிவுக்கு உள்ளிருக்கும்அடையாளங்கள் மாற்றமடையா.

சந்திரமௌலீச வித்தியாசாலை மாணவனின் வினுக்களுக்கு ஐயவினுவிடை.

1. × தா என்பது பெருக்கல் அடையாளம். ஒரு எண்ணை மற்றொரு எண்ணுல் பெருக்கல் என்பது அந்த எண்ணை மற்ற எண்ணளவு முறைகளால் கூட்டுதலாம். +5×4=5+5+5+5 அல்லது 5ஐ நான்குமுறை கூட்டுதலாம்.

ஆனல் —5×+4=—5—5—5—5=—20
ஆனல்—5×—4=(-5)×(-4) இதில் முதல் —5ஐ நான்குமுறை கூட்டின்—20 வரும்.

ஆனல் இதின் மறமொழியை பின்—சயவால் பெருக்க+20ஆகும்.

2. +×+=பெருக்கல் என்பது கூட்டல் என்று முன்காட்டப்பட்டிருக்கிறது+5ஐ+4ல் பெருக்கின 5ஐநாலுமுறை கூட்டலாம் அது +20தான்.

3-ம் 4, பிறைவடிவுகள் இருக்கும் வரையில் அதற்குமுன் என்னஅடையாளம்வரினும் அதற்குள் இருக்கும் அடையாளங்கள் மாற்றப்படவேண்டியதில்லை பிறைவடிவம் நீக்கப்படின் மாத்திரம் அதற்கு முன்னிருக்கும்அடையாளம் சகவாயின் உள் அடையாளங்கள் மாற்றப்படா மலும் அதற்கு முன்னிருக்குமடையாளம் சகவாயின் உள் அடையாளங்கள் மாற்றப்படா மறும் அதற்கு முன்னிருக்கு மடையாளம் சயவாயின் அதற்குள்ளிருக்கும் அடையாளம் மாற்றப்பட்டு வரும்.

இவ்விரு வினுக்களில் பிறைவடிவுகளிருக்கும்வரை மேற்கண்டபடி உள் அடையாளங்கள் மாற்றப்படா. வினுக்காரன்வினுவில் பிறைவடிவு நீக்கப்படும்போதுதான் உள்ளடையாளங்கள் மாற்றமடையும் அல்லது மாற்றமடையாது என்று காட்டவில்லை ஆகையால் இதற்குவிடை வினுத்திருத்தப்பட்ட பின்தான் கொடுக்கப்படும்.

5. இவ்விரு செய்யுளும் ஒன்றோடு ஒன்று மாறுபடினும் அபிமானத்தைக் காட்டுவதில் தேச வழக்கத்தின்படி ஒன்றோடு ஒன்று ஒத்திருக்கும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தம் நாட்டினரின் இயல்பான வழக்கத்தையும் மதுரைச் சங்கத்தார் தம் நாட்டு வழக்கத்தையும் காட்டுதற்கு தத்தமக்கேற்ப உதாரணங்களைப் பொருத்தி வைத்தார்களென்பதுதான் எமது துணிபு.

இவ்வினுவைக் கேட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின நாட்டாராயின் அவர் குறிப்பிட்டபடி தன்நாட்டினரின் இயல்பான அபிமானவழக்கத்தையும் மதுரைச் சங்கத்தைச் சார்ந்த நாட்டாராயின அவர்களின் மதிப்புப்படி எடுப்பது உத்தமமென்று நம்புகிறேன். இச்செய்யுளின் மாறுபாட்டிற்கும் உரையாசிரியர்கள் தருந்த சமாதானம் கூறியிருப்பார்கள் அச்சமாதானஉரைகளை இப்பத்திரிகைவாயிலாக அறிய விரும்புகிறேன் இவ்வினுவில் எது உண்மை என்றுல் இதற்கு விடை 2-ம் உண்மைதான். விடைகளைப் பிரசுரிக்கும்போதே மேற்கண்டவைகளையும் பிரசுரிக்கவும்.

இப்படிக்கு,
மு. வேலுப்பிள்ளை, வைத்தியா.

### முன் வெளிவந்தவற்றின் விடைகள்.

1. மதராஸ் கல்கத்தா
2. 59 படிகள்.
3. (I) 6912 (II) ரூபா 20 சதம் 24.
4. (I) 11250 நாட்கள் (II) $6\frac{1}{4}\frac{3}{5}$ நாட்கள்
5. ரூபா 2585 சதம் $48\frac{3}{4}$
6. (I) 17 நாட்கள் (II) 238 மைல்.
7. குற்றநீதுணைக்கடலாலவாயிலாய்
சுற்றநீபிறனுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுனுரைப்பதென்முகம்மனே,

8

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 16 | 9 | 22 | 15 |
| 20 | 8 | 21 | 14 | 2 |
| 7 | 25 | 13 | 1 | 19 |
| 24 | 12 | 5 | 18 | 6 |
| 11 | 4 | 17 | 10 | 23 |

9

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | 47 | 16 | 41 | 10 | 35 | 4 |
| 5 | 23 | 48 | 17 | 42 | 11 | 29 |
| 30 | 6 | 24 | 49 | 18 | 36 | 12 |
| 13 | 31 | 7 | 25 | 43 | 19 | 37 |
| 38 | 14 | 32 | 1 | 26 | 44 | 20 |
| 21 | 39 | 8 | 33 | 2 | 27 | 45 |
| 46 | 15 | 40 | 9 | 34 | 3 | 28 |

### விடையனுப்பினேர்.

(1) மு. வேலுப்பிள்ளை, வைத்தியர், புலோலி.

4 இக்கணக்கு கிதான மற்றதாய்த் தோற்றுகிறது. ஏனென்றுல் 1825 ஆட்களுக்கு 40 நாளைக்கு உணவிருக்கிறதென்று அல்லாது எத்தனை பேர் ஆட்களிருந்தார்கள் என்று வரையறவாய்க் காட்டவில்லை. இன்னும் 'இவர்கள்'' என்பதை 1825 ஆட்களாயெடுத்த போதிலும் இன்னும் கிதானமாகவில்லை. பின் இராசனுடைய நண்பர்களும் போர் வீரருமாக 1800 பேர் 12 நாட்களுக்குச் சாப்பிட்டார்களாம் இவர்களுடன் முன்கண்ட 1825 ஆட்களும் சாப்பிட்டதாக கணக்கில் காணவில்லை. ஆகையால் இதற்கு இரண்டு விடைகளுண்டு ஒன்று 1825 பேர் பிந்தினவர்களுடன் சாப்பிட்டதாகவும்மற்றது 1825பேர் சாப்பிடாததாகவும் எடுக்கப்பட்டது.

1 ஒருவனுக்கு 11250 நாட்களுக்குப் போதியது.

2 ஒருவனுக்கு 33150 நாட்களுக்கு போதியது. அங்குள்ளவர்களுக்கு 6 நாட்களுக்கும் மிகுதி 300 பேரின் ஒருநாட் சாப்பாடும் ஆகும்.

(2) அங்குள்ளவர்களுக்கு 18 நாளைக்கும் 300 ஆட்களின் 1நாட்சாப்பாடும் மிஞ்சும்.

8

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

8-ம் வினுவுக்கு வினுவனுப்பியவர் அனுப்பிய விடை பிழையானதாகும் இதற்கு மு வே. வைத்தியர் சரியான விடை கூறியிருக்கின்றனர். (வை. இ)

(2) க. செ. சோமசுந்தரம்
1, 2, 6, 7, மாத்திரம்

(3) 8 இராமலிங்கம், மாணவன் மல்லாகம்.
1 தொடக்கம் 7 வரையில்.

### வினுக்கள்.

தங்கம்மாள் கைலாசம் சிவியாதெரு.

1. தண்ணீருக்குப் பசையான மரத்தின்கீழிருந்து மூன்றுக்குப்படற்கட்டுகிற அண்ணமாரே மூன்றுபேர் இரண்டு காலால் நடந்து போனதுங் கண்டீரோ? வரம்பில் அடிகண்டேன் தாழும்பொழுது தலைகண்டேன் இதன் அர்த்தமென்ன?
2. செப்புஞ்செப்புஞ் சேர்ந்தாப்போல் சிறுவர் கொண்டை முடிந்தாப்போல் அத்தனை முத்தும் பதித்தாப்பேரல் இதுவும் ஒரு மரத்தின் கனி.
3. பச்சைமரம் நாலு, பால்மரம் நாலு, விசிறுகோல் ஒன்று, விறகுதடி இரண்டு.

## அல்வை வேவிலந்தை முத்துமாரியம்மன்கோவிற் பரிபாலனசபை.

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்த மன்னிய
மறைவற மாளிட மாயின் மேவிய
அறவனை செறிகளும் பிரதுகாக்கிய
இறைவி தன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

"திருந்தப் புவனங்களீன்ற பொற்பாவை" யாஞ் சொந்தன்னையார் திருக்கோவில்கொண்டெழுந்தருளும் தலங்களுளொன்றாகும் அல்வை வேவிலந்தை முத்துமாரியம்மை ஆலய வெளி மண்டபத்தில் 29-6-30 ஞாயிற்றுக் கிழமை மாலை சாலைாமணியளவில்கூடி ஆலயம் சீரமைவுற்றுத் தரிசிப்போர்க்கு வசதிகள் வாய்ந்ததொன்று யிருப்பக் கண்டு தரிசித்திடற வேண்டுமென்ற அவாவுற்றோரின் நன்முயற்சியால் அல்வை வாசிகளின் மகாநாடொன்று கூட்டப்பட்டது அத்தருணம் ஸ்ரீ மு சப்பிரமணியமவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அல்வையின் பல பகுதிகளினு மிருந்து பெருந் தொகையானோர் சமூகமாயிருந்தனர்

அக்கிராசனர் முகவுரையாய்ச் சில பேசிய பின் அல்வை சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ வ. ஆறுமுகமவர்கள் சைவ ஆலயங்களிருக்கவேண்டிய முறை, இப்பொழுதவைக ளடைந்திருக்கும் நிலை, அவைகளைச் சீர்படுத்தக் கையாளவேண்டிய வழிவகைகள் எனப் பொதுவகையானே பேசியபின்னர் குறித்த ஆலயவிஷயமாய்ச்சிறப்பு வகையானுங் குறிப்பிடுவாராய், இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் ஊரவர்களது பொதுத் திரவியங்கொண்டு நடைபெற்றதாகிய வைரக்கற்றிருப்பணி இன்றும் பூர்த்திசெய்யாத குறையாயிருப்பதற்கும் அது போன்ற வேறு குறைகட்குமாக மிக வருந்தி, அவ்வாறுண்மை நம்மவர்களின் சிரத்தைக் குறைவாதும், இன்னுஞ் சிலபலகாரியங்களாலுமேற்பட்டனவென்றும், அவைகளையாமீண்டு சிந்தித்தல் மனஸ்தாபத்திற்கும் காரியக் கேட்டிற்கும் பிரயோசனமற்ற வீண் விவாதங்கட்குமிடமாகுமென்றுங் குறிப்பிட்டனர்.

ஸ்ரீ இ வேலுப்பிள்ளை யவர்களும் அதனை யநுவதித்துச் சில பேசிய பின்னர்க் காலாதீத மானமையால் ஆலய பரிபாலனத்திற்குரிய சபைத்தேர்வை ஆரம்பித்தலவசியத்தைக் குறிப்பிடலும், அக்கிராசனரவர்கள் சபையாரின் இலக்கணம், அவர்களின் கடமை முதலியவற்றை விளக்குதலும், தேர்வு நடைபெற்றது.

சபையாரின் கடமை முதலியவற்றைக் குறித்துச் சமூகமானோரிற் சிலர் கிளப்பிய வினாக்களுக்கு அக்கிராசனர் அநுமதிபெற்று செல்வியடிவிலுள்ள அரசாங்கத்தாரால் நடத்தப்படும் முன்மாதிரிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஆ கணபதிப்பிள்ளை, ஸ்ரீ தாவல்லிபுரம் ஆகிய இருவரும், சந்தேகம் நீவிர்த்தியாகும் வகையானே விடையிறுத்தனர்.

உத்தியோக அங்கத்தவர் உட்பட இருபத்துநாலுபேர் நிர்வாக சபை அங்கத்தினராவர். இவருள் ஐந்து பேரும், காரியதரிசி, பொக்கிஷாதிபர் என்னுமிருவருஞ் சேர்ந்தே கருமகர்த்தர் சபையாகும் இவர்களே ஆலயவேலைகளை நேர் நின்று நடைபெறச் செயற்பாலர்

வடமராட்சிமேற்கு மணியகாரன் ஸ்ரீ க சின்னத்தம்பியவர்களே, அல்வை வேவிலந்தை முத்துமாரிஅம்மன்கோவிற் பரிபாலன சபையெனப் பெயரிய விச்சபையின் தாதாவாகும்

அல்வைச் சைவப்பிரகாச வித்தியாசாலை மனேசர் ஸ்ரீ க சின்னத்தம்பி உபாத்தியாயர் அவர்கள் அக்கிராசனராகும்

ஷை பரிபாலனசபை நிர்வாக அங்கத்தினர் 7-7-30ல் கூடி, ஆலயபரிபாலனத்திற்கு வேண்டிய பிரமாணங்களைத் தயாரித்து 10-7-30ல் பின்னரும் மகாசபை கூட்டி அவற்றை நிறைவேற்றி அமைவுறக் கடமைகள் ஆரம்பிக்கலாயினர்.

அல்வாய் தெற்கு
பருத்தித்துறை
28—7—30

இங்ஙனம்
க க. இராமலிங்கம்
ஷை சபைக்காரியதரிசி

## தமிழ்ஹோம் கொழும்பு.

யவ்ஸமின் கொற்றேச் நம். 107 'கல்வ்ஸ்ரூவ் ரோட்டு'கோட்டடித் தெருவுக்கு இப்போ மாறிவிட்டது.

Mi. 29 7, 11 & 14)

## அறைக்கீரை விதைத் தைலம்.

Regd 1901 — Years OLD

KUMBAKONAM
V. SWAMI IVENGARS
RENOWNED
ARIKEERAI VERAI THAILUM.
MANUFACTURER JEMBAGATHAMMAL

பித்த மேகரோனது சிரசுக்கேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண் புகைச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல், ஒருதலைவலி இருதலைவலி, பீனிசம், காதிரைல், சீழ்வடிதல், காது இரைச்சல் காதுவலி, ஐந்துவருஷத்திற்குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, சரப்பன், தேமல், சிரசில் மயிருதிர்தல், சொண்டுவிழுதல், முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாவளர்க்கச்செய்யும் இந்த தேசத்தில் காணப்படாத வழுத்துக்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில் ஈர்தலர்கள் தைலம் தேய்த்து ஸ்நானம் பண்ணினால், தேகத்திற்குக்குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீர் சீயக்காயுடன் ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போசனஞ்செய்துகொள்ளவேண்டும். 8-நாள் வரையிலும் சுகந்தம் மாறாது அன்று பகலில் மாத்திரம் தூங்கக் கூடாது.

| | | | | |
|---|---|---|---|---|
| புட்டி 1-க்குக் கிரயம் | | | ரூபா | 1—10—0 |
| ,, 3 | ,, | ,, | ,, | 4—08—0 |
| ,, 6 | ,, | ,, | ,, | 9—0 —0 |
| ,, 12 | ,, | ,, | ,, | 16—8 —0 |

வி பி சார்ஜ் பிரத்தியோகம்

(விலாசம்.) V. S. ஜெம்பகத்தம்மாள்.
மைலாப்பூர், சென்னை.

No Marichetti, Street,
Mylapore

(Q 1. வி 14-1 13 1 30.

## நெல்லுக்குற்றும் யந்திரம்.

"ஜூவத்தா" முறை.

14279 இலக்க உரிமைப்பதிவு பெற்றது.

(1) ஒவ்வொன்றாக நெல்லை உடைத்தால் அரிசி எவ்விதம் உருமாறாது இருக்கின்றதோ அவ்விதம் செய்வது இந்த யந்திரத்தின் விசேட இலக்கணம்.

(2) இந்த யந்திரத்தைப் பாவிப்பதினால் சப்பட்டையைத் தூளாக்கல் உடைதல் முதலிய அநேக சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) அரிசியிலே போஷிப்புக்குரிய பகுதியை இது நீக்காது காத்துக்கொள்கின்றது. மற்றைய யந்திரங்களினால் இது முடியாதாகும்.

இந்த யந்திரத்தைத் தொழிற் படுத்தல் மிக இலகுவும் சிக்கற்றதுமாகும். முழு விபரமும் கொடுபடும். இரண்டு பேருக்கு வேலை. ஒரு மணி நேரத்தில் 25 புசல் நெல்லுக் குற்றப்படும்.

(4) எம்மிடம் ஒழுங்கு செய்து இதைச் சோதனை செய்து பார்க்கலாம்.

(5) விலை ரூ 110=கொழும்பிலே புகையிரதத்தில் ஏற்றிக் கொடுக்கலாம்.

J. W. A. கதிர்காமர்,
(வட, கீழ், வடமத்திய, வடமேல் மகாணங்களின் காரியாதிகாரி (ஏஜண்ட்)
மானிப்பாய் யாழ்ப்பாணம்.

(M. 3 11 to 10 9-30)

## ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

"ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமி தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ,காவ்ய,புராண,வித்தியாசாலை"என்னும்,நாமத்தையுடைய வித்தியாசாலை யொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூதவரு ஆடிமாத ௧-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இலவசமாக அன்ன வஸ்திரம் பெற்றுக்கொண்டு சேர விரும்புவோர் இந்த மாதம் ௩௦-ந் திகதி வரையிலும் ஏனையோர் பின்னும் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படிவித்தியாசாலை ஸ்தாபகர் ப்ரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையாக்குருக்கள்) அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெற்றற்பாலன.

☞ தெரிவுசெய்யப்பட்ட முதல் 12 மாணவர்களுமே இலவசப் போஷணையும் கல்வியும் பெறுவர்.

நல்லூர், 20-7-30.

(M. 1. 21st to 21-8-30.)

## ஸ்ரீ ராமநாத சித்த ஆயுர்வேத வைத்தியசாலை வண்ணார்பண்ணை.

ஆயுர்வேதவைத்தியர் T. பூலோகசுந்தரம் L. I. M. (சென்னை.)

[இவரே சொந்தக்காரரும் வைத்தியஞ் செய்வோருமாவர்.]

வட இலங்கையில் இதுபோன்ற ஔஷதசாலை வேறு இல்லையெனலாம். இங்கே ஆயுர்வேதமுறை யூனானிமுறை சித்தவைத்திய முறைகளை அநுசரித்துச் செய்யப்பட்ட மருந்துகள் உண்டு,

நீராமோய்களெனப்படும் க்ஷயரோகம் நீரிழிவு வாதம் என்னுமிவைகளை நிச்சயமாக மாற்றுவோம்.

அசாத்தியமான மேகரோகங்களை மாற்றுவதில் 13 சந்ததியாக அநுகூலமடைந்த பரம்பரை வைத்தியர்கள்.

மருந்துகள், உண்ணும் விபரத்தோடு அனுப்பப்படும், ஏனைய விபரங்களுக்கு, தெரிவிக்கவும்.

நோயாளரைப் பார்க்கும் நேரம்.

சுளிபுரம் (பெரியபரிகாரியார்) வீட்டில் காலை 8 மணிவரை; பின்னேரம் 7 மணிக்குமேல்.

வட்டுக்கோட்டை: பின்னேரம் 4 மணிதொடக்கம் 6 மணிவரை.

வண்ணார்பண்ணை: காலை 10 மணி தொடக்கம் 1 மணி வரை.

மூளாய்: வெள்ளிக்கிழமையில் 2 மணிதொடக்கம் 4 மணி வரை.

Y. 77. 30-6-31 வி.)

## யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு.

| | ரூ. ச. |
|---|---|
| **பாராசசேகர முதற்பாகம்** | |
| சிரரோக நிதானம் | 3-50 |
| **ஷை இரண்டாம் பாகம்** | |
| சொப்பரோக நிதானம் | |
| பாலரோக நிதானம் | 2-75 |
| **வைத்திய விளக்கம்** | |
| பதார்த்த சூடாமணி | 2-00 |
| **வைத்தியக் களஞ்சியம்** | |
| (ஓர் மாதவெளியீடு) வருடசந்தா | 4-00 |

இவை எம்மிடத்தும் யாழ்ப்பாணத்துள்ள பிரபல புத்தக சாலைகளிலும் பெறற்பாலன.

ஏழாலை: ஐ. பொன்னையா வைத்தியர்.
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(Q 13 வி 29-5 to 28-8-30 )

## கியாத நாத மணிகள்.



தேவாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் உபயோகப்படத்தக்க, காதுக்கினிய ஓசையோடு கூடிய 'கியாத நாத மணிகள்' சிறு மணி தொடக்கம் மிகப்பெரியமணி வரையில் எங்களிடத்தில் எந்த நேரமும் பெறத்தக்கன இன்னும் விரும்பியவர்கள் தங்களுக்கு வேண்டிய மணியின் பிரமாணத்தையும் நிறையையுந் தெரிவித்தால், ஒருகுறித்த தவணைக்குள் தவறுமற் செய்துகொடுக்க ஆயத்தமாயிருக்கின்றோம். எங்கள் தொழிற்சாலையில் ஆக்கப்பட்ட மணிகளே யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன.

S A தம்பிப்பிள்ளை & சன்ஸ்,
நல்லூர்.

Y. 74 வி 5-2-31 )

## இந்தியாவின் மிகப் பெரிய ஒறியன்றல் சிவவிமாக்கம்பனியின் 19-ம் மூன்று வருட லாபப்பங்கீடு

1930-ம்ஆ டிசம்பர்மீ 31-ந் திகதியில் காணப்படும் லாபத்தின்படி நடத்தப்படும்.

இதற்குமுந்திய மூன்று கணக்குத்திட்டங்களில் கண்ட லாப ஏறுபடி.

1921-ம்ஆ 21½ லட்சம், 1924-ம்ஆ 53 1/3 லட்சம்,
1927-ம்ஆ 78 லட்சம் ரூபாக்களாகும்.

வீமாக்காரருக்குக் கொடுப்பதாக நியமிக்கப்பட்ட இறுந்தொகைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1921-ம்ஆ | வருஷமொன்றுக்கு | ரூபா | 1000-க்கு | ரூபா | 10; |
| 1924-ம்ஆ | ,, | ,, | 1000-க்கு | ,, | 22½; |
| 1927-ம்ஆ | ,, | ,, | 1000-க்கு | ,, | 25. |

இந்தவருடத்தில் லாபத்துடன் வீமாத் திருகிறவர்கள் 1930-ம்ஆ டிசம்பர்மீ 31உ வரைக்கும் கட்டிவந்தால் இம்முறை லாபத்திற் பங்குபெறுவார்கள்.

இப்பொழுதே வீமாவிற் சேர்ந்தால் உமக்கு லாபமுண்டு.
பிரதிநிதிகள் எங்குமுண்டு.

தலைமை வேலைத்தலம்:—ஒறியன்றல் கட்டடங்கள், பம்பாய்.

விபரங்களுக்குக் கீழ்க்குறிக்கப்பட்ட ஒருவருக்கு எழுதியறிக.

A. C. லோட்டன், கிளைக்காரியதரிசி, 52 பெயிலித்தெரு,கொழும்பு.
J. P. கனகசபை, பிரதானபிரதிநிதி, கண்டி.

பிரதிநிதிகள்.
வில்லியம் மாதர் & சன்ஸ், யாழ்ப்பாணம்.
T சுப்பிரமணியம், கந்தரோடை, சுன்னாகம்.
M. குமாரசூரியர், சுளிபுரம்.
S. இரத்தினசிங்கம், மட்டக்களப்பு.

(Y. 78. 30-6-30—29-7-31 வி. & க தி.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டக்கோவைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்ற அடைவு பிடிக்கும் வல்லுவெட்டித்துறை ச. ஐயாத்துரை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

1929ஆ 6ம் மீ

| இல | தி | ரூ | ச | வூரும் பெயரும் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|
| 645 | 13 | 13 | 04 | வல்லுவெட்டித்துறை கு செல்லம் | வெள்ளைக்கல்தோடு சோடி 1 மோதிரம் 1 |
| 654 | 18 | 5 | 53 | வல்லுவெட்டித்துறை ச பொன்னம்மா | பொன்தோடு சோடி |
| 657 | ,, | 32 | 04 | கரணவாய் கா கந்தையா | பொன் அரைஞாண் 1 |
| 1929ஆ 7ம் மீ | | | | | |
| 694 | 1 | 23 | 04 | உடுப்பிட்டி ச காங்கேசு | [illegible] அட்டியல் 1 |
| 705 | 8 | 25 | 04 | வல்லுவெட்டித்துறை சா அன்னமுத்து | பொன்காப்பு சோடி 1 |
| 721 | 14 | 13 | 04 | வல்லுவெட்டித்துறை கு செல்லம் | பொன்செடி மோதிரம் 1 |
| 722 | ,, | 50 | 04 | வல்லுவெட்டித்துறை கு செல்லம் | பொன் முறிச்சக்குத்தியட்டியல் 1 |
| 740 | 24 | 8 | 03 | வல்லுவெட்டித்துறை ஞா. விஞயகம் | ஒற்றைக்கல் இரன் தோடு சோடி 1 |
| 1929ஆ 8ம் மீ | | | | | |
| 771 | 5 | 6 | 53 | கப்பாழலை வே இலட்சுமிப்பிள்ளை | சீசி 1 |
| 777 | 6 | 20 | 04 | வல்லுவெட்டித்துறை சி வேலும்மயிலும் | காறுநாவட்டியல் 1 பொன்தோடு சோடி 1 |

விற்பனவு:—பிரமோதூதவரு ஆவணி மீ 8ந் திகதிக்குச் சரியான 1930ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மபட்டாவை புறகேலவாக மிகுதி பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

V. M. கந்தசுவாமி
வெந்தில்மேஸ்தர்

(Mis 23. 11&14 )

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai.